1990 மார்ச் 23]

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப்பேட்டை, தொண்டியக்காடு போன்ற பகுதிகள் இறால் வளர்ப்பதில் முன்னணியில் இருக்கின்றன. அதற்கான பல்லாயிரக் கணக்கான ஏக்கர் பரப்பளவும் இருக்கிறது. மீன் வளத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அரசுக்கு நல்ல இலாபம் வரக்கூடிய அளவுக்கு இறால் உற்பத்தி இருந்துவருகிறது. எனவே, அந்தப் பகுதியில் அரசு இறால் வளர்ப்புக்காக இடங்களை எடுத்துக் கொள்ளுமா?

9-30 மணி

மாண்புமிகு திரு. மு.கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை மீன் வளர்ச்சித் துறைக்கு அனுப்பி வைக்கப்படும்.

கொல்லிமலையில் சந்தன எண்ணெய், சந்தன சோப்பு தொழிற்சாலை

* 5495 திரு. கே. சின்னசாமி:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கொல்லிமலையில் சந்தன எண்ணெய், சந்தன சோப்பு தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு. திரு கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டத்தில் கொல்லிமலையில் சந்தன எண்ணெய், சந்தன சோப்புத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலையில் சந்தன மரங்கள் அதிகமாக இருப்பதால் அங்கு சந்தன எண்ணெய், சந்தன சோப்பு தொழிற்சாலை அமைத்தால் அங்கேயுள்ள மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பும், அரசுக்குப் பல கோடி ரூபாய் வருமானமும் கிடைக்கும். ஆகவே தொழிற்சாலை அமைக்குமா அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே கொல்லிமலை மட்டுமல்ல, இதுபோன்று 6, 7 மலைப் பகுதிகளிலே சந்தன மரங்கள் அதிகமாக வளர்கின்றன. சந்தன எண்ணெய் ஆலை அமைப்பதன் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்பதிலே கருத்து மாறுபாடுகள் இல்லை. ஆனால் வருவாய் அதிகமாகக் கிட்டுமா என்பதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே இப்போது கொல்லிமலையிலே அப்படிப்பட்ட எண்ணெய் ஆலையை அமைக்கின்ற உத்தேசம் இல்லை.

திரு. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலை, கல்ராயன் மலை, பச்சை மலை, போத மலை, பால மலை ஆகிய மலைகளில் சந்தன மரங்கள் அதிகமாக உள்ளன. கொல்லி மலையை மையமாக வைத்து புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருந்தது. இந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து, தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முந்தைய ஆட்சிக்காலத்தில் சந்தன எண்ணெய் ஆலை அம்பேத்கார் மாவட்டம் தெற்குப் பேட்டிலே தொடங்கப்பட்டது. அந்த ஆலை இன்றைக்கு மூடப் பட்டுக் கிடக்கின்றது. முதலிலே அதைத் தொடங்குகின்ற பணி யிலே ஈடுபட்டிருக்கின்றோம். அது தொடங்கப்பட்டு வருவாயோடு நடைபெறுகின்ற காலத்திலே இன்னும் இதுபோன்ற ஆலைகளை வேறு இடங்களிலே தொடங்குவதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் மாவட்டத்தில் தெற்குப்பேட் என்ற இடத்தில் ஏற்கெனவே முந்தைய அரசால் சந்தன எண்ணெய் தயாரிக்கும் ஆலை திறக்கப்பட்டு அது மூடப்பட்டது. மூடப் பட்ட அந்த ஆலையைத் திறக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விட்டு, அமைச்சர் அவர்கள் வந்து பார்வை இட்டிருக்கிறார்கள். அதை உடனடியாக ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த ஆலை 1988-லே மூடப்பட்டது. மீண்டும் இந்த ஆலையைத் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கை வந்து நானும் அந்த ஆலையைச் சென்று பார்வையிட்டேன். நம்முடைய அமைச்சரவையும் இந்த ஆலையைத் தொடங்கலாம் என்று அனுமதி தந்திருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் ஒரு மாத காலத்திலே நான் குறிப்பிட்டு, இந்த ஆலை தொடங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 இடங்களிலே சந்தன மரங்கள் உற்பத்தி ஆகின்றன என்று சொன்னார்கள். எந்தப் பகுதியிலே அது அதிகமாக உற்பத்தி ஆகிறது என்ற கேள்விக்கும், அதே போல் கோடிக்கணக்கான சந்தன மரங்களை இன்றைக்குக் கடத்திக் கொண்டிருக்கின்றார்களே, இதை நிரந்தரமாகத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 23]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடிக்கணக்கான சந்தன மரங்கள் இன்றைக்குக் கடத்தப்படவில்லை. ஏற்கெனவே இருந்த ஆட்சிக் காலத்தில் கடத்தப்பட்டு வந்தது. நாளாவட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு—குறிப்பாக நேற்றையதினம் இங்கே எழுப்பப்பட்டது—கொள்ளையன் வீரப்பனுடைய நடவடிக்கை ஏறத்தாழ முற்றிலுமாக நிறுத்தப்பட்டு விட்டது. அவன் நம்முடைய காட்டிலே வெட்டி கர்நாடக எல்லையிலே பதுக்கி வைத்திருந்த 100 டன் சந்தன மரங்களைச் சமீபத்தில் நாம் பிடித்திருக்கிறோம். ஆகவே வீரப்பனுடைய கும்பல் இன்று நம்முடைய காட்டிலே சந்தன மரங்களை வெட்டுகின்ற காரியத்திலே ஈடுபடுவதை ஏறத்தாழ தடுத்து விட்டோம். இன்னும் ஆங்காங்கே சில கடத்தல்கள் இருக்கலாம். ஆகவே முன்பு இருந்ததைப் போல் கோடிக்கணக்கான சந்தன மரங்கள் இப்போது வெட்டிக் கடத்தப்படவில்லை. இன்னும் இருப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கையிலே தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் மாவட்டத்தில் தெற்குப் பேட்டில் ஏற்கெனவே தொடங்கப்பட்ட சந்தனத் தைல ஆலை மூடப்பட்டுவிட்டதாக அமைச்சர் தெரிவித்து இருக்கிறார். ஏற்கெனவே அதே மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில் குமரிகோப்பு என்ற இடத்தில் 1½ கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆலை தொடங்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்து, பிறகு அது என்ன காரணத்தினாலேயோ தெற்குப் பேட்டில் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட அந்த ஆலை கூட 1988-ல் இருந்து மூடப்பட்டிருக்கிறது. இது வேதனை தரக்கூடிய விஷயம். ஏன் அவ்வாறு மூடினார்கள்? என்ன காரணம்? 70 சதவிகிதம் சந்தன மரங்கள் கிடைக்கிற இடத்திலே, ஜவ்வாது மலை அடிவாரத்தில் இருக்கிற அந்தத் தொழிற்சாலையை ஏன் மூடினார்கள்? அத்தொழிற்சாலையை தனியாருக்குக் கொடுப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா? அப்படி விற்பனை செய்யப்படமாட்டாது என்பதற்கு அமைச்சர் அவர்கள் இங்கே உத்தரவாதம் அளிப்பார்களா?

9—35 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985-ல் அத்தொழிற்சாலை ஆரம்பிக்கப் பட்டது. 1988-ல் அது மூடப்பட்டது. மூடப்பட்டதற்கு முக்கியமான காரணங்கள் மூன்று. ஒன்று மெக்கானிக்கல் பிராபிளம், அடுத்தது வாட்டர் பிராபிளம், மூன்றாவது மார்க்கெட்டிங் பிராபிளம். இந்த 3 பிரச்சினைகளிலும் மெக்கானிக்கல் பிராபிளத்தைப் பொறுத்தவரையில், நாங்கள்

கடந்த 3, 4 மாதங்களாக நடவடிக்கை எடுத்து தீர்த்து விட்டோம். ஒரு ட்ரையல் எடுத்துப் பார்த்ததன் மூலம் நல்ல எண்ணெயை உற்பத்தி செய்ய முடியும் என்பதை நிரூபித்து இருக்கிறார்கள். அடுத்து வாட்டர் பிராபிளத்தைப் பொறுத்த வரையிலும் அங்கே கிடைக்கிற தண்ணீர் ஏற்ற தண்ணீர் அல்ல என்பதால் 12 லட்சம் செலவில் பாலாற்றுப் படுகையிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மூன்றாவது, மார்க்கெட்டிங் பிராபிளத்தைப் பொறுத்தவரையிலும், ஆலையைத் தொடங்கி, கொஞ்சம் கொஞ்சமாக உற்பத்தி செய்து, அதை முழுமையாக விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும், செய்வோம் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தர்மபுரி மாவட்டங்கள் மலையும் மலையைச் சூழ்ந்த பகுதிகளுமாக இருக்கிற காரணத்தால் நிறைய சந்தன மரங்கள் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலை இருப்பதால் அங்கே உற்பத்தியாகிற சந்தன மரங்களுக்கு அரசும் நிறைய செலவு செய்திருப்பதால் அங்கே ஒரு சந்தன எண்ணெய் தொழிற்சாலையை ஆரம்பிப்பதன் மூலமாக, அவற்றை வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பிருக் கிறது. மேலும் சந்தன மரங்கள் அங்கே நிறைய இருப்பதால் தொடர்ந்து வீரப்பனைப் போல நூறு வீரப்பன்கள் அங்கே உற்பத்தியாகிற அரசு சந்தன மரங்களைத் திருடுவதாலும் அரசே சந்தன எண்ணெய் மற்றும் சோப்புத் தொழிற்சாலையை ஆரம்பித்தால் அரசின் நோக்கம் நிறைவேறும் வகையில் ஒரு அரிய வாய்ப்பாக அது அமையும் என்பதால் அது குறித்தும் அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் சித்தேரி என்ற பகுதியிலே நிறைய சந்தன மரங்கள் உற்பத்தியாகின்றன என்பதிலே எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அடிக்கடி நூறு வீரப்பன்கள், நூறு வீரப்பன்கள் என்று எண்ணிக்கையைச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். (சிரிப்பு) நூறு வீரப்பன்களின் தகவலை இங்கே உறுப்பினர் தருவாரா? அப்படித் தருவார்கள் என்றால் நாங்கள் நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் கேள்வி கேட்டபோது ஒரு கேள்விக்கான பதிலை நான் சொல்லாமல் விட்டுவிட்டேன். தனியாருக்குச் சந்தனத் தொழிற்சாலையை விற்பதற்குரிய முயற்சி அரசுக்கு இருக்கிறதா என்று அவர்கள் கேட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு முயற்சி ஒரு காலக் கட்டத்திலே, நம்முடைய ஆட்சி வருவதற்கு முன்பு

இருந்தது. ஆனால் அப்படிப்பட்ட முயற்சி ஏதும் எடுக்கப் படக் கூடாது என்பதிலே இந்த அரசு தீவிரமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வனத் துறைப் பணியாளர்களுக்கு கைத் துப்பாக்கி வழங்குதல்

* 5762 திரு. ஆர். வரதராஜன்—திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காட்டிலாகா அதிகாரிகளின் பாதுகாப்பை முன்னிட்டு பாரஸ்டர் மற்றும் ரேஞ்சர்களுக்கு கைத்துப்பாக்கி வழங்கப் படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வனத்துறை பணியாளர்களின் தேவைக்கேற்ப கைத் துப்பாக்கி வழங்கப்படும்.

திரு. ஆர். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் பணியாற்றுகிறவர்களுக்குத் துப்பாக்கிச் சுடுவதில் பயிற்சி கொடுக்கிறார்கள். அதுபோல வன இலாகாவில் பணி புரியும் அதிகாரிகளுக்கும் துப்பாக்கி சுடும் பயிற்சி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை போன்று வனத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும் துப்பாக்கி வழங்கப்படும் என்று சொல்வதிலிருந்தே நிச்சயமாகப் பயிற்சி இல்லாமல் அதை வழங்க முடியாது. ஆகவே நிச்சயமாகப் பயிற்சியும் அளிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறு வீரப்பன்களை ஒழிக்க நவீன ஏ. கே. ரக துப்பாக்கி.... (மணியடிக்கப்பெற்றது)

9—40 மணி

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைப் பணியாளர்கள் மிகப் பெரிய காடுகளில் சோதனைக்காகச் செல்லும்போது, அவர்கள் காணாமல் போகிற நிலையும், என்ன ஆனார்கள் என்று தெரியாத நிலையும் ஏற்படுகிறது. மேலும் சந்தன மரத் திருடர்களைக் கண்டவுடன் தகவல் தெரிவிக்கும் வகையில் அவர்களுக்கு ஆபத்து ஏற்படும்பொழுது தகவல் தெரிவிக்க அவர்களுக்கு 'வயர்லஸ் கருவி' வழங்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.